ISSN 1391-9504

# விஜய்

Vijey විජයි

04.10.2017 - மலர் 14, இதழ் 32



## உலகின் விந்தையான பாலங்கள், வீதிகள்...

விலை ரூபா 15/-



பிள்ளைகள் மத்தியில் அதிகரித்துள்ள இரத்த சோகை



மாணவர்களுக்கு உதவும் செயலிகள்



உலகில் அதிக விலைக்கு விற்பனையான நூல்

மாணவர்களுக்கான அறிவார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொலிதீன் பாவனையை முற்றாக ஒழித்த நாடுகள் சில...

பொலிதீன் பாவனை உலகளாவிய ரீதியில் பெரும் சுற்றாடல் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பல நாடுகளில் பொலிதீன் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பொலிதீன் தடையை மீறுபவர்களுக்கு சட்ட ரீதியான தண்டனைகளை வழங்குவதிலும் இந்நாடுகள் பின்னிற்பதில்லை. இந்த வருடம் செப்டெம்பர் மாத்த்திலிருந்து இலங்கையிலும் மறுசுழற்சிக்கு உட்படுத்த முடியாத பொலிதீன் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், உலகில் பொலிதீன் பாவனையை முற்றாகக் கைவிட்டுள்ள சில நாடுகளைப் பற்றி அறிந்துகொள்வோம்.







பொலிதீன் பைகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய பைகள்

## இந்தியாவில் கர்நாடகா மாநிலம்

உலகில் பொலிதீன் பாவனை அற்ற மாநிலமாக, இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தைக் குறிப்பிடலாம். இங்கு பொலிதீன் மட்டுமன்றி; பிளாஸ்டிக் கோப்பைகள், ரிஜிஃபோம் என்பனவும் மிகவும் குறைந்த மட்டத்திலேயே பயன்படுத்தப்படுகின்றன. கர்நாடகாவிலுள்ள விற்பனை நிலையங்களில் எந்தக் காரணத்தைக் கொண்டும் பொலிதீன் பயன்படுத்தவே முடியாது. மீறிப் பயன்படுத்தினால் சிறைத் தண்டனை வழங்கப்படும்.

## தஸ்மேனியா

2003ஆம் ஆண்டு முதல் இந்நாட்டில் பொலிதீன் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், இங்கு பொலிதீன் உற்பத்தி ஓராண்டில் 0.003 சதவீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது. ஆபத்து மிக்க ஔடதங்கள் மற்றும் சுகாதார செயற்பாடுகளுக்காக மட்டுமே, இந்நாட்டில் பொலிதீன் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்கா

2004ஆம் ஆண்டு முதல் பொலிதீன் பாவனைக்கான தடை இங்கு அமுலில் உள்ளது. மருந்து வகைகளை பொதியிடக்கூட இங்கு பொலிதீன் பயன்படுத்துவதில்லை. பிளாஸ்டிக்கும் இவ்வாறுதான். இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பிளாஸ்டிக்கினாலான தடுப்பு மருந்து ஏற்றும் ஊசிகளைக்கூட, கண்ணாடியில் தயாரிக்கும் முயற்சிகளில் இந்நாடு ஈடுபட்டு வருகின்றது.



குப்பைகளாகச் சேரும் பொலிதீன் பொருட்கள் ஏனைய உயிரினங்களின் வாழ்க்கைக்கும் அச்சுறுத்தலாக உள்ளன

## இஸ்ரேல்

2003ஆம் ஆண்டு முதல் பொலிதீன் பாவனைக்கு தடைவிதித்துள்ள மற்றுமொரு நாடுதான் இஸ்ரேல் ஆகும். இங்கு பொலிதீன் விற்பனைக்கான சட்ட ரீதியிலான தடை 2006ஆம் ஆண்டு முதல் அமுலில் உள்ளது. இங்குள்ள வீடுகளுக்கு அருகில் பொலிதீன் பைகள் அல்லது பொலிதீன் சார்ந்த ஏதேனுமொரு பொருளேனும் இருந்தால், அதற்கான தண்டப் பணத்தினை அந்த வீட்டு உரிமையாளர் செலுத்த வேண்டும். தண்டப் பணம் செலுத்த முடியாது போனால் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும்.

## கென்யா

இந்த நாட்டைப் பொறுத்த வரை பொலிதீன் உற்பத்தி செய்தலும் விற்பனை செய்தலும் தண்டப் பணம் அறவிடத்தக்க குற்றமாகவே கருதப்படுகின்றது. கென்யாவின் மொத்த நிலப்பரப்பில் அரைவாசிப் பகுதியை மூடிவிடக்கூடிய அளவுக்கு பொலிதீன்கள் குப்பை மேடுகளில் நிறைந்துள்ளன. எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கு நாட்டில் பொலிதீன் உற்பத்திகள் எதனையும் மேற்கொள்ளாமல், நாட்டினுள் இருக்கும் பொலிதீனை மறு சுழற்சி செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கென்ய அரசு அறிவித்துள்ளது.



'பொலிதீன் குப்பைகள் உங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும்' என்பதை உணர்த்தும் வகையில் பொலிதீன் குப்பைகளைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள விசாலமான உருவம் →

Digitized by Noolaham Foundation

# கின்னஸ் சாதனைக்காக மாணவர்களை வருத்திய மணப்பெண் குறித்து விசாரணை



கின்னஸ் சாதனைக்காக பாடசாலை மாணவர்களைப் பயன்படுத்திய மணப்பெண் குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்படும் என்று கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். கண்டி, கன்னொருவ பகுதியில் உள்ள அலவத்துகொட ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த 250 மாணவர்களை வீதியோரம் மணித்தியாலக்கணக்கில் வெயிலில் நிற்கச் செய்து மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு நீளமான மணப்பெண்ணின் புடவை முந்தானையை ஏந்தியவாறு வீதியில் நிற்கச் செய்த செயல் சிறுவர் உரிமை மீறலாகும் என்ற குற்றச்சாட்டு பரவலாக நிலவி வருகின்ற நிலையிலேயே, இது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அழகுக் கலை நிலையமொன்றைச் சேர்ந்த மேற்படி மணப்பெண் நீளமான திருமண உடையை உடுத்தியவர் என்ற உலக கின்னஸ் சாதனையை நிகழ்த்த வேண்டும் என்ற நோக்கிலேயே மாணவர்களை இவ்வாறு வருத்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது. குறிப்பாக, பாடசாலை சீருடையுடன் மாணவர்களை இவ்வாறு தனிப்பட்ட ஒரு நிகழ்வுக்காக பயன்படுத்தியமை சட்டப்படி பாரிய குற்றமாகும் என சுட்டிக்காட்டப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
பெக்ஸ்: 011-2479652

# மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா

## 7 ஆம் ,8 ஆம் திகதிகளில்...




மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா ஒக்டோபர் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. மத்திய மாகாண இந்து கலாசார விவசாயத்துறை அமைச்சர் மருதபாண்டி ராமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி சாகித்திய விழாவின் ஆரம்ப நாளில் காலை 9 மணிக்கு பாடசாலை மாணவர்களின் ஊர்வலம் நடைபெறவுள்ளதுடன்; தேசியகொடி, மத்திய மாகாணக் கொடி, சாகித்தியக் கொடி ஆகியவை ஏற்றப்பட்டபின்னர் விழா உத்தியோகபூர்வமாக ஆரம்பமாக உள்ளது.

முதல் நாளன்று மாணவர்களின் கலை, கலாசார, நடன நிகழ்வுகள், சொற்பொழிவுகள் ஆகியவை நடைபெறவுள்ளதுடன், இரண்டாம் நாளன்று உறுமி, தப்பு, மேளம், நாட்டுக்கூத்து, உடுக்கு ஆகிய மலையக பாரம்பரிய கலைநிகழ்வுகள் உட்பட; சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலைகளில் பயிர்ச்செய்கை முறையை மேற்கொள்ளப் பணிப்பு



சகல அரசாங்கப் பாடசாலைகளிலும் பயிர்ச்செய்கை முறை மேற்கொள்ளப்படுவதற்கான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றுநிருபம் கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளது. இதற்கமைய,ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் இந்த பயிர்ச்செய்கைத் திட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள10,000 பாடசாலைகளில் 5,774 பாடசாலைகள் 50 பேர்ச்சர்ஸ்களுக்கும் அதிகமான நிலப்பகுதிகளைக் கொண்டிருப்பதாகவும், இதில் பயிர்ச்செய்கை முறைகளை மேற்கொள்ள முடியும் எனவும் ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இடவசதி குறைந்த பாடசாலைகள் தமக்குள்ள குறுகிய இடப்பரப்பிற்குள் இயலுமான வகையில் இந்த பயிர்ச்செய்கை முறையை மேற்கொள்ளுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

# சிறந்த பாடசாலை சஞ்சிகை தெரிவுப் போட்டி



பாடசாலை மாணவர்களின் ஆக்கபூர்வமான படைப்பாற்றல்கள் மற்றும் ரசனை. திறன் ஆகியவற்றை மேலும் விருத்தி செய்து திறமைமிகு எதிர்கால சந்ததியொன்றை உருவாக்கும் நோக்கில் கல்வி அமைச்சும், கலாசார அலுவல்கள் திணைக்களமும் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டத்தின் கீழான பாடசாலை மாணவர்களுக்கான சிறந்த பாடசாலை சஞ்சிகையை தெரிவு செய்யும் போட்டி.....

## போட்டி விதிமுறைகள்

இந்தப் போட்டியில் எந்தவொரு பாடசாலையும் கலந்து கொள்ளமுடியும். 2017 ஆம் ஆண்டுக்கென தயாரிக்கப்பட்ட ஆண்டு அல்லது அரையாண்டு பாடசாலை சஞ்சிகையை இப்போட்டிக்கென முன்னெடுக்கமுடியும். மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்கள் தெரிவுசெய்யப்படவுள்ளது. மொத்தமுள்ள 25 மாவட்டங்களிலும் முதல் இடத்தைப் பெற்ற 25 சஞ்சிகைகளுள் முதல் மூன்று இடத்தைப் பெறும் சஞ்சிகைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றிற்கு தேசிய மட்டப் போட்டியில் சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும். விண்ணப்பப்படிவத்துடன் உரிய சஞ்சிகையும் எமக்கு அனுப்பப்படல்வேண்டும்.

## நிபந்தனைகள்

01. பாடசாலை மட்டத்தில் இப்போட்டியில் பங்குபற்றமுடியும்.
02. மாணவர்களின் சஞ்சிகையை சமர்ப்பிக்க முடியும்.
03. ஆண்டு அல்லது அரையாண்டு பாடசாலை சஞ்சிகையை இதற்கென சமர்ப்பிக்க முடியும்.
04. கையெழுத்துப் பிரதி வடிவிலான சஞ்சிகைகளையும் சமர்ப்பிக்கமுடியும்.
05. உங்கள் பாடசாலைக்கு உரித்துடைய பிரதேச செயலகத்திலோ அல்லது மாவட்ட செயலகத்திலோ உள்ள கலாசாரப் பிரிவு உத்தியோகத்தரிடம் கையளிக்க முடியும்.
06. போட்டி முடிவுத் திகதி 2017 ஒக்டோபர் 15



அச்சு ஊடக அனுசரணை விஜய்

இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்ட பாடசாலை சஞ்சிகைப் போட்டி
மாதிரி விண்ணப்பப்படிவம்

01. முதலெழுத்துகளுடன் பெயர்:....................
02. பாடசாலை :....................
03. பாடசாலை முகவரி :....................
04. பாடசாலை தொலைபேசி :....................
05. மாவட்டம் :....................
06. பிரதேச செயலகம் :....................
07. சஞ்சிகையின் பெயர் :....................

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையெனவும் சரியானவை எனவும் இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆக்கம் என்னால் தயாரிக்கப்பட்ட ஆக்கம் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................... ....................................
மாணவர் பெயர் கையொப்பம்

எமது பாடசாலையினால் தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட சஞ்சிகையுடனான போட்டி விண்ணப்பத்தை உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கின்றேன்.

அதிபரின் பெயர்:....................
கையொப்பம் :....................
பதவி முத்திரை :.................... திகதி:....................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால இயந்திரம் 10

## காட்டுக்குள் ஒரு கிளி

தொடர்கதை...

-ஜெ.விபாகர்

**நால்வரும் பெருமூச்சு விட்டபடியே சற்று இளைப்பாறினார்கள். காடு முழுவதுமாக இருள் சூழ்ந்திருந்தது. சற்றுத் தூரத்தில் இதுவரை அவர்கள் வாழ்நாளில் கேட்டிராத விலங்குகளின் ஓசைகள் எல்லாம் கேட்டன.**

"என்ன சத்தம் அது...?!"

"மாலை நம்மைத் தாக்கிய அந்த தஸ்மேனிய புலியாக இருக்குமோ..!?"

"தஸ்மேனிய புலியா?? அது தஸ்மேனியால தானே இருக்கணும்.. இங்க எப்பிடி வந்திச்சு...!?"

"அழிஞ்சு போன மிருகத்தைப் பற்றி இப்போ எதுக்குடா பேச்சு..!?"

"நம்ம காலத்தில் அழிஞ்சுருச்சு. ஆனா இப்போ இங்கே இருக்குதேடா... இப்போ கூட எங்கேயாவது ஒளிஞ்சிருந்து பார்க்குதோ தெரியலை..."

"இந்த இருட்டில் இயந்திரம் இருக்கும் இடத்தை எப்படிக் கண்டுபிடிக்கிறது...!?"

அஹமட் கேட்ட கேள்வி புரிந்தது போல, கீக் கீக் என்று சத்தமிட்டபடி மரக் கிளையொன்றிலிருந்து கீழே பறந்து வந்தது விராயுகத்தின் கிளி. வர்ஷா அதை கைகளில் தாங்கி, தடவிக் கொடுத்தாள். சில நொடிகளில் கிளி மீண்டும் கைகளை விட்டுப் பறந்தது.

"ஏய்..!! கிள்ளை... நில்லு...! இங்கே வா..!!"

வர்ஷா அதைத் துரத்திக் கொண்டு போனாள். வினித்தும் வர்ஷாவிற்கு துணையாகச் சென்றான். இருட்டில் எதுவுமே கண்களுக்குத் தெரியாததால், வர்ஷா கவலையுடன் ஓட்டத்தை நிறுத்தினாள். வினித் அவளுக்கு ஆறுதல் சொன்னான். மற்ற இரு நண்பர்களும், அவர்கள் பின்னால் வந்து சேர்ந்தனர்.

"இப்போ நாங்கள் என்ன செய்வது? விடியும் வரை காத்திருக்க வேண்டியது தானா?"

"அப்படித்தான் செய்ய வேண்டும் என நினைக்கிறேன்" என்றான் முகமட்.

"இல்லை அந்த மிருகங்கள் மீண்டும் நம்மைக் கண்டுவிட்டால் ஆபத்து!!"

"ஊருக்கே திரும்பிச் சென்று விடலாம்" என்றான் வினித்.

தூரத்தில் ஊர் மக்கள் ஏற்றி வைத்திருந்த நெருப்புப் பந்தங்களின் ஒளி லேசாகத் தெரிந்தது. அப்போதுதான் வினித் அதைக் கண்டான். ஊர் இருந்த திசைக்கு நேர் எதிர் திசையில், காட்டுக்குள்ளே ஒரே ஒரு ஒளி தெரிந்தது.

"இந்தப் பக்கமிருந்து எப்படி ஒளி வரும்? காட்டுக்குள்ளே என்ன இருக்கிறது...!?"

வினித் சில கிளைகளை விலக்கி விட்டுப் பார்த்தான். அந்த ஒளியை அடையாளம் கண்டுகொண்டான். அவனை அறியாமலேயே சிறு புன்னகை செய்தான். உற்சாகமாக அழைத்தான்.

"அஹமட்! லியோ! இங்கே பாருங்கள்!!"

"என்ன?..."

"அது நம் இயந்திரத்தின் ஒளி!! அது அடுத்த பயணத்துக்கு தயாராகிவிட்டது என்று நினைக்கிறேன்..!"

"அப்போ... இந்த முறை வீட்டுக்குப் போகலாமா..? என் கை வலிக்கிறது..."

வர்ஷா மிகுந்த எதிர்பார்ப்புடன் கேட்டாள்.

"ஆம் வாருங்கள்..!!"

நால்வரும் அந்த ஒளியை நோக்கி நடந்தார்கள்.. நடுவில் திடீரென அந்தக் கொடுமையான மிருகங்கள் எங்கிருந்தாவது பாய்ந்து விடுமோ என்கிற யோசனையில் அவர்களது இதயம் படபடத்தது!! ஆனால் நல்ல வேளையாக, அப்படி எதுவும் நடக்கவில்லை. ஒளியை நெருங்கினார்கள். அப்போதுதான் வினித் யூகித்தது சரி என்று அனைவருக்கும் புரிந்தது. இயந்திரம் முழுவதுமாக அவர்களின் கண்களுக்கு தென்பட்டது. வினித் இயந்திரத்தை நெருங்கி, கதவைத் திறந்தான். நால்வரும் உள்ளே நுழைந்தார்கள்.

"வினித்..! எல்லாம் சரியாக இருக்கிறதா..??"

"நாங்கள் புறப்படலாமா..??"

"பொறு, அதற்கு முதல் கொஞ்சம் பேசுவோம்..."

"என்ன...!??!"

"அப்போ... நாங்கள் இங்கு பார்த்த பொற்கலம்தான் மண்ணுக்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட எலிமன்ட் எக்ஸா?"

"அப்படித்தான் தெரியுது"

"அப்போ... இன்றைக்குத் தான் அது மண்ணுக்குள் புதைந்த தினமா..?? நாங்கள் அந்த காட்சியைத்தான் இப்போ கண்டோமா...?!!"

வினித் பேச்சை நிறுத்தி விட்டு, சுற்றிப்பார்த்தான். பட்டன்களும், காலம் காட்டும் திரையும் ஒளிர்ந்தது. அவனது நோக்கம் முழுவதும் மீண்டும் தங்கள் காலத்துக்கு திரும்புவதிலேயே இருந்தது.

(தொடரும்)



## மந்திரியின் மதியுகம்

முன்னொரு காலத்தில் மதுரையை ஆண்ட விபிஷகன் எனும் மன்னரை முனிவர் ஒருவர் சந்தித்தார். அவர் தன் தோளில் தொங்கிய பையில் இருந்து ஒரு மாம்பழத்தை மன்னர் கையில் கொடுத்து, "மன்னா.. இது பழுக்க இன்னும் பத்து நாட்களாகும். கனிந்ததும் சாப்பிடு.. நான் வருகிறேன்.." என்று கூறி முனிவர் விடைபெற்றுச் சென்றார். மன்னர் அதை அருகில் இருந்த அமைச்சர் கையில் கொடுத்து "இப்பழம் பழுத்ததும் எடுத்து வாருங்கள்.." என்றார்.

பத்து நாட்கள் கழித்து அமைச்சர் அந்த மாம்பழத்தை எடுத்துப் பார்த்தபோது, அவர் இதுவரை அறிந்திராத ஒரு மணம் வீசியது. அதை அரண்மனைக்கு எடுத்துச் சென்ற அமைச்சர் பழத்தை அரிந்து துண்டுகளை ஒரு வெள்ளிக் கின்னத்தில் வைத்து மன்னரிடம் கொடுத்தார். மன்னர் அதைச் முழுவதுமாக சுவைத்து மெய் மறந்தார்.

"அடடா.. அமைச்சர் பெருமானே.. உங்களுக்குத் தரலாம் என இருந்தேன்.. அதற்குள் முடிந்து விட்டதே" என்றார் மன்னர்.

"மன்னா அதற்கும் ஒரு காலம் வரும்....அது வரை நான் காத்திருப்பேன்!..." என்றார் அமைச்சர்.



அவர் கூறிபடியே காலங்கள் கழிந்தன. அந்நிகழ்வு நடந்து ஐந்து வருடங்களும் கழிந்துவிட்டன.


ஒரு நாள் அவையில் அமைச்சர் மற்றும் பிரதானிகளுடன் அரசர் விவாதித்துக் கொண்டிருந்த போது, ஒரு பணியாள் அமைச்சரிடம் வந்து ரகசியமாகக் காதில் ஏதோ சொல்ல அமைச்சரும், "ம்.. கொண்டுவா கூடைகளை!" என்று கட்டளை இட்டார். பத்து பெரிய கூடைகளைத் தூக்கி வந்து அமைச்சர் முன் இறக்கினார்கள் பணியாளர்கள். அந்தக் கூடையின் உள்ளே மாம்பழங்கள். அதன் மணம் சபை முழுக்கப் பரவியது. எல்லோரும் வியக்க, மன்னரிடம் ஒன்று ராணிக்கு ஒன்று என அங்கிருந்த அனைவருக்கும் பழங்கள் விநியோகிக்கப்பட்டன. அதை ருசித்த அனைவரும் மகிழ்ந்தனர்!

அப்போது மன்னர் வியப்புடன், "அமைச்சரே... இது சில வருடங்களுக்கு முன்னர் இமயத்தில் இருந்து வந்த ரிஷி தந்த பழம் போலச் சுவையாக உள்ளதே!.. எப்படி இத்தனை பழங்கள்..?" என வினவினார் மன்னர். அதற்கு அமைச்சர் "மன்னா.... முனிவர் தந்த பழத்தை என்னிடம் தந்து பழுத்ததும் எடுத்து வரச் சொன்னீர்கள். பழுத்ததும் அதன் வாசனையில் இருந்து அது கிடைத்தற்கரிய பழம் என அறிந்தேன். பழத் துண்டுகளை அரிந்த பின்னர் அதன் கொட்டைகளை பாதுகாப்பாக தோட்டத்தில் ஊன்றி தண்ணீர் பாய்ச்சி ஜாக்கிரதையாக வளர்த்தேன்.. அது மரமாகி காய்ந்துக் கனிந்த முதல் பழங்களே இவை.

மன்னர் வியந்தார்! "ஆஹா.. தாங்கள் அல்லவோ உன்னத மானவர். ஒரு சிறிய பொருள் கிடைத்தால் அதை எல்லோருக்கும் கிடைக்கும் வண்ணம் செயலாற்றும் தங்களை எத்தனை முறை போற்றினாலும் தகும்!" என பாராட்டினார் மன்னர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகில் அதிக விலைக்கு விற்பனையான நூல்






உலகில் நடைபெற்ற ஏல விற்பனையில் அதிக பெறுமதிக்கு விற்பனையான நூலாக லியனாடோ டாவின்சியின் 'கோடெக்ட் லீசெஸ்டர்' என்று அழைக்கப்படும் கையெழுத்துப் பிரதி நூல் திகழ்கின்றது. ஒரே ஒரு பிரதி மட்டுமே உள்ள இந்த நூல் ஏல விற்பனையின் போது 30.8 டொலர் மில்லியனுக்கு விற்பனையாகியுள்ளது. அத்துடன், இங்கிலாந்து மன்னரின் அரச அதிகாரத்தினைக் குறைக்கும் முகமாக, அக்காலத்தில் கொண்டு வரப்பட்ட 'மக்னா காட்டா' சாசனத்தின் பழமையான பிரதியும், அமெரிக்காவில் முதலில் அச்சிடப்பட்ட நூலான உலகின் மிகவும் பழமையான பைபிள் மற்றும் பிரார்த்தனை நூல் ஆகியனவும் அதிக பெறுமதி கொண்ட நூல்களுள் அடங்குகின்றன.





## அமெரிக்காவின் பறவைகள்

அண்மைக் காலத்தில் உலகில் அதிக விலைக்கு விற்பனையாகியுள்ள நூலாக ஜோன் ஜேம்ஸ் ஒட்போனின் (John James Audubon) அமெரிக்காவின் பறவைகள் (Birds of America) என்ற நூலின் பிரதி திகழ்கின்றது. இது லண்டன் நகரில் நடைபெற்ற ஏல விற்பனையின் போது 7.3 மில்லியன் பவுண்களுக்கு (11.5 மில்லியன் டொலர்களுக்கு) விற்பனையானது. இது சராசரியாக இலங்கை நாணயப் பெறுமதியின்படி, 1150 மில்லியன்கள். அதாவது 1.5 பில்லியன்கள் ஆகும்.



## நூல் தொகுதி

அமெரிக்காவின் பறவைகள் என்ற இந்த நூலின் பிரதிகள் நான்கு நூல்கள் கொண்ட தொகுதியாகவே குறிப்பிடப்படுகின்றது. 19ஆம் நூற்றாண்டுக்குரியதும் மிகவும் பாதுகாப்பானதும் உயர் தரத்திலானதுமான இந்த சிரேஷ்ட நூலுக்கு விற்பனையில் சிறந்த பரிசினை அளிக்க தீர்மானிக்கப்பட்டது. அன்றைய காலப்பகுதியில் சிறந்த அச்சுத் தரத்தினைக் கொண்டிருந்த இந்த நூலில் 435 பக்கங்கள் உள்ளன. இந்த நூலை லண்டன் வர்த்தகர் ஒருவர் கொள்வனவு செய்தார்.



## பெரிய சித்திரம்

ஒட்பொனின் இந்த படைப்பில் கைகளால் நிறந்தீட்டப்பட்ட பெரிய அளவிலான 435 சித்திரங்கள் உள்ளன. தற்போது இதில் 120 பிரதிகள் மட்டுமே உள்ளன. இவற்றின் 107 பிரதிகள் நூலகங்களில் பாதுகாப்பாக உள்ளன. இதன் முழுமையான பிரதி இறுதியாக 2012ஆம் ஆண்டு லண்டனின் 'சுத்பி' நிறுவனத்தில் ஏலம் இடப்பட்டது. அவ்வேளை, அதிக தொகைக்கு விற்பனை செய்யப்பட்ட தனிப் படைப்பாக இந்நூல் திகழ்ந்தது. இது தொடர்பில் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 3 அடி உயரம்

3 அடி உயரம் கொண்ட இந்த பாரிய நூல்கள் நான்கு தொகுதிகளாக உள்ளன. இந்த படைப்பு 1827- 1838 காலப்பகுதியில் படைக்கப்பட்டுள்ளது. பிரான்சிய கப்பல் கெப்டனின் புதல்வரான ஒடுபொன் திறமை வாய்ந்த ஓவியக் கலைஞராவார். அவர் தனது செவ்விந்திய வம்சாவளி மனைவியுடன் அமெரிக்க காடுகள் முழுவதும் பயணித்தே, இந்த சித்திரங்களை வரைந்துள்ளார்.

## அயர்ச்சி தரும் பணி

ஒரு சித்திரத்தினை முழுமையாக்குவதற்கு அவருக்கு 60 மணித்தியாலங்கள் தேவைப்பட்டன. 1880ஆம் ஆண்டுகளில் இந்நூல் வெளியான போது, அனைவரும் வியந்து போயினர். இந்த நூலைப் படைப்பதற்கு ஒட்பொன் மிகவும் கொடூரமான முறையினைப் பயன்படுத்தியிருந்தார். அதாவது, வரைய வேண்டிய பறவையைப் பிடித்து கம்பிகளில் அறைந்து வைத்து அதனைப் பார்த்து அவர் படம் வரைந்திருந்தார். (- இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனிதர்கள் இலகுவில் செல்லமுடி

இன்றைய காலப்பகுதியில் போக்குவரத்துத்துறை மிக வேகமாக முன்னேறியுள்ளது. இதனால் உலகின் எந்த மூலைக்கும் நாம் இலகுவில் சென்றடைய முடியும். ஆனால், எந்த போக்குவரத்து சாதனத்தைக் கொண்டும் இலகுவில் சென்றடைய முடியாத சில இடங்களும் உலகில் உள்ளன. அந்தவகையில், மனிதன் செல்வதற்கு கடினமான இடங்களையும் மனிதனின் பாதங்கள் படாத சில இடங்கள் பற்றிய விபரங்களையும் பார்ப்போம்.

## லண்டனிலிருந்து கணிப்பிடுதல்

1914 ஆம் ஆண்டுகளில் லண்டனிலிருந்து ஐரோப்பா உட்பட ஏனைய நாடுகள் அனைத்திற்கும் சில தினங்களில் அல்லது மாதங்களில் சென்றடையக்கூடிய நிலையே இருந்தது. இன்று இந்த கால அளவு நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு குறைந்து போயுள்ளது. மாதங்கள் வாரங்கள் சென்ற காலம் போய் இப்பொழுது ஒரே நாளில் உலகின் மற்றொரு இடத்தினைச் சென்றடையக் கூடியதாகவுள்ளது. எனினும் இந்த முன்னேற்றங்களுக்கு மத்தியிலும் உலகில் சென்றடைய முடியாத அல்லது செல்வதற்குக் கடினமான சில இடங்களும் இருக்கின்றன.











## சிட்லி மலை உச்சி

சிட்லி மலை அன்டாட்டிக்காவில் உள்ள மிகவும் உயரமான எரிமலை யாகும். அன்டாட்டிக்காப் பகுதி உலகில் இலகுவில் சென்றடைய முடியாத பகுதிகளில் ஒன்றாகும். இங்குள்ள மேரி பேர்டிலேண்ட் என் பகுதியில்தான் சிட்லி எரிமலை அமைந்துள்ளது. 4,285 மீற்றர் உயரம் கொண்ட இந்த எரிமலையின் உச்சியில் முதன்முதலில் 1990 ஆம் ஆண்டில் மனிதன் காலடி எடுத்து வைத்தான். அதன் பின்னர் இரு ஆராய்ச்சி சுற்றுப் பயணங்கள் மட்டுமே இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.



## பிட்டிகரின் தீவு


ஐக்கிய இராச்சியத்திற்குரிய பிட்டிகரின் தீவு சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது. இத்தீவிற்கு அவ்வளவு இலகுவாக சென்றுவிட முடியாது. இத்தீவில் விமான நிலையம் இல்லை. இங்கு போக்குவரத்து கடல் மார்க்கமாகவே இடம் பெறுகின்றது. லண்டனிலிருந்து இத்தீவிற்கு செல்வதாயின் முதலில் லண்டனிலிருந்து அமெரிக்காவின் லொஸ் ஏஞ்ஜேஸ்ல் வரை விமானத்தில் பயணிக்க வேண்டும். அங்கிருந்து மீண்டும் 'தஹிட்டி' எனும் தீவிற்கு விமானத்தில் சென்று, மீண்டும் விமானம் மூலம் தஹிட்டி தீவிருந்து மன்கரேவா தீவிற்கு விமானத்தில் செல்ல வேண்டும். அதனையடுத்து மன்கரோவா தீவில் இருந்து மிகவும் ஆழமான அபாயகரமான கடற்பகுதி ஊடாக பிட்டிகல் தீவுக்குப் படகில் செல்லவேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாத உலகின் சில பகுதிகள்

## கர்கலன் தீவு





இந்த தீவு இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளது. இதனை அண்மித்து மடகாஸ்கர் தீவு உள்ளது. கர்கலன் தீவிற்கு கப்பல் போக்குவரத்தினூடாக, மட்டுமே செல்ல முடியும். அத்தோடு, மடகாஸ்கருக்கு அருகில் உள்ள ரியுனியன் தீவிலிருந்து மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையே கர்கலன் தீவிற்கு கப்பல் பயணத்தை மேற்கொள்ள முடியும். இந்த பயணம்கூட 6 நாட்களுக்கு நீடிக்கும். அதுமட்டுமன்றி, இங்குள்ள உயரமான மலை உச்சியில் இறுதியாக 1960 ஆம் ஆண்டில்தான் மனிதன் காலடி வைத்தான். அதுவும் உலங்கு வானூர்தி ஒன்றின் உதவியுடன் இந்த பயணம் நிகழ்ந்திருந்தது.

## எவரெஸ்ட் மலைச் சிகரம்



நேபாள- சீன எல்லையில் அமைந்துள்ள எவரெஸ்ட் மிகவும் பிரபல்யமான பகுதி என்பதனால் இங்கு மனிதர்கள் அடிக்கடி பயணங்களை மேற்கொள்வதைக் காணலாம். இதன்படி, இங்கு சுமார் 4 ஆயிரம் பயணிகள் மட்டுமே சென்றுள்ளனர். இந்த முயற்சியில் மரணித்தவர்களின் எண்ணிக்கை 223 ஆகும். இதன்படி, எவரெஸ்ட் செல்ல முயலும் 20 பேர்களில் ஒருவர் மரணத்தை தழுவுவதாக கணிக்கப்பட்டுள்ளது.

## K2 மலைச் சிகரம்



எவரெஸ்ட் மற்றும் இமயமலை பகுதியில் அமைந்துள்ள K2 மலைச் சிகரத்தினை இதுவரை 300 பேர் மட்டுமே சென்றடைந்துள்ளனர். இந்த சிகரத்தினை அடையும் முயற்சியின்போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 77 ஆகும். இதன்படி, இங்கு செல்லும் ஐவரில் ஒருவர் இறக்க நேரிடுகின்றது.





## மூசு சீஹிஸ்

பாகிஸ்தானுக்கு சொந்தமான இந்த மலை 7,453 மீற்றர் உயரம் கொண்டது. இங்கு செல்வதற்கு இரு தடவைகள் மட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டது. ஆனால், அப்பயணங்கள் வெற்றியளிக்கவில்லை. சட்டத்தின் தடையின்றி செல்லக் கூடிய உலகின் மிகவும் கடினமான இடத்தினை யாராவது தேடுவார்களாயின் அதற்கு இந்த மலைப் பகுதியே பொருத்தமானதாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அன்னபூர்ணா மலைச் சிகரம்

அன்னபூர்ணா மலை உலகின் 10 ஆவது உயரமான மலைச் சிகரமாகும். இதுவரை 191 பேர் மட்டுமே இங்கு சென்றுள்ளனர். மேலும், இங்கு செல்லும் முயற்சியில் 61 பேர் இறந்துள்ளனர். இதன்படி, இந்த சிகரத்தினை அடைய முயற்சிக்கும் நால்வரில் ஒருவர் இறக்க நேரிடுகின்றது.



## கன்கார் புலுன்சம் மலை

இந்த மலை இமயமலையில் அமைந்துள்ளது. 7,570 மீற்றர் உயரம் கொண்ட இந்த மலையினை இதுவரை எவரும் சென்றடையவில்லை. இந்த மலைப் பகுதி பூட்டான் நாட்டிற்கு சொந்தமாக உள்ளது. இங்கு செல்வதற்கு அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது. இங்கு செல்வதற்கு இயற்கை இடையூறுகளுடன் சட்ட ரீதியிலான இடையூறுகளும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்

பெயர்: ..............................................

**01) கீழ்க் காணும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

மழைக்காலத்தில் வனம் மிகவும் செழிப்பாகக் காணப்பட்டது. மரங்கள் எல்லாம் பச்சைப் பசேலென்று காட்சி அளித்தன. திறந்தவெளிகளில் புற்கள் உயர்ந்து வளர்ந்து அசைந்தாடின. குளங்கள், நதிகள் என்பனவற்றில் நீர் நிறைந்திருந்தது. வனத்தில் உள்ள குழிகளில் எல்லாம் நீர் நிறைந்து காணப்பட்டது. இதனால், நீர்நிலைகளைத் தேடி மிருகங்கள் வருவது அரிதாக இருந்தது. சில மிருகங்கள் மட்டும் அங்கும் இங்கும் அலைந்து திரிந்தன. யானைக் கூட்டம் ஒன்று ஆர்ப்பாட்டமின்றி ஆடி அசைந்து சென்றுகொண்டிருந்தது.

01. 'வனம்' என்பதன் ஒத்த கருத்துச் சொல் தருக.
    ......................................................................
02. பந்தியிலுள்ள நீர்நிலைகள் எவை?
    ......................................................................
03. பந்தியில் காணப்படும் இணைமொழிகள் இரண்டு தருக.
    ................................ ................................
04. நீர்நிலைகளைத் தேடி மிருகங்கள் வருவது ஏன் அரிதாக இருந்தது?
    ......................................................................
05. ஆர்ப்பாட்டமின்றி சென்ற மிருகங்கள் எவை?
    ......................................................................
06. 'ஆடி அசைந்து' என்பதன் பொருள் யாது?
    ......................................................................

**02) கட்டத்தினுள் இருந்து சரியான விடையைத் தெரிந்து எழுதுக.**

> **போலி, மறுமை, அந்தப்புரம், நாத்திகன், கொடுங்கோல், உலோபி**

01. தனது பொருள் எதையும் பிறருக்கு ஈயாதவன்:
    ......................................................................
02. அரண்மனைகளில் பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட தனி இடம்:
    ......................................................................
03. ஒன்றைப் போல் மற்றொன்றிருத்தல்:
    ......................................................................
04. மரணத்தின் பின் வரும் நிலைமை:
    ......................................................................
05. இறைவன் இல்லை என்று வாதிடுபவன்:
    ......................................................................
06. அரசன் முறைகேடாக ஆளும் ஆட்சி:
    ......................................................................




**03) பன்மைச் சொல் தருக.**

01. பூச்சியே - ....................................
02. எனக்கு - ....................................
03. நீ - ....................................
04. அவன் - ....................................

**04) பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.**

01. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
    ......................................................................
02. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
    ......................................................................
03. நித்தம் போனால் முற்றம் சலிக்கும்.
    ......................................................................

**05) சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**

01. 'ஏழை, அடிமை என எவரும் இல்லை' என்ற வாக்கியம் உணர்த்துவது;
    1. அடிமைகளாக இருக்க வேண்டும்
    2. மக்கள் எல்லோரும் சமமாக மதிக்கப்பட வேண்டும்
    3. ஏழைகள் என்று எவரும் இல்லை
02. நான் விடியமுன் எழுவேன். இங்கு 'விடியமுன்' என்பது;
    1. இரவு 2. நள்ளிரவு 3. அதிகாலை
03. உழவன் ஏர் பிடித்து வயலை உழுதான். 'ஏர்' என்பது;
    1. மேழி 2. மட்டப்பலகை 3. மண்வெட்டி
04. மீன்கள் கடலில் நடந்து சென்றன. இக்கூற்று;
    1. சரியானது 2. பிழையானது
    3. கூற முடியாது
05. ''மேலே ஏறி வலது புறமாகத் திரும்புக''. இது எவ்வகை வாக்கியம்?
    1. அறிவித்தல் 2. விளம்பரம்
    3. அறிவுறுத்தல்

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

### சுற்றாடல்

(செப்டெம்பர் 27 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. 4 | 04. 2 | 07. 4 | 10. 1 | 13. 1 | 16. 1 |
| 02. 1 | 05. 3 | 08. 1 | 11. 1 | 14. 3 | 17. 4 |
| 03. 1 | 06. 3 | 09. 2 | 12. 4 | 15. 3 | 18. 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் விந்தையான பாலங்கள், வீதிகள் சில

உலகில் சில நாடுகளில் வீதிகள், பாலங்கள் ஆகியன அமைந்துள்ள விதம் மிகவும் விசித்திரமாக இருக்கும். அவை அமையப்பெற்றுள்ள தன்மையே இவ்வாறு விசித்திரத்தையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்திவிடுகின்றன. இத்தகைய சில இடங்களையே இங்கு காண்கிறீர்கள்.

## அட்லாண்டிக் பாலம்



நோர்வே நாட்டில் அட்லாண்டிக் கடல் பகுதியில் உள்ள தீவுகளை இணைக்கும் விதத்தில் பலவிதமான பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தகைய பாலங்களில் ஒன்றே இது. இங்கு அடிக்கடி சூறாவளி வீசுவதால் ஆர்ப்பரிக்கும் கடல் அலைகள் இந்த பாலத்தில் முட்டி மோதுவதைக் காணலாம்.

## உலகின் உயரமான பாலம்



பிரான்ஸ் நாட்டின் 'டார்ன்' எனப்படும் ஆற்றிற்கு குறுக்காக கட்டப்பட்டுள்ள இந்தப் பாலம் உலகின் உயரமான பாலமாக கருதப்படுகின்றது. தரையிலிருந்து 1,125 அடி உயரம் கொண்டது இந்தப் பாலம்.

## சிக்கலான மேம்பாலம்



டெக்ஸாஸ் மாகாண 'ஹஸ்டன் ஸ்பாக்ஹெட்டி பவுல்' எனும் மேம்பாலத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

## உலகின் நீளமான பாலம்



சீனாவின் டான்யாங்-குன்ஷன் கிராண்ட் எனப்படும் இந்த பாலமே உலகின் நீளமான பாலமாகும். இதன் நீளம் 164.8 கி.மீற்றர் ஆகும்.

## விந்தையான பாதை



சீனாவின் ஹுனான் மாகாணத்தின் மலை உச்சியில் உள்ள 'டியான்மென்' எனும் குகைக்குச் செல்லும் இந்த வீதி 99 வளைவுகளைக் கொண்டதாகும்.

## தடுக்கி விழுந்தால் நீரில்



தடுக்கி விழுந்தால் தண்ணீரில் போய் விழும் அளவிற்கு மலைச் சரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள ஒரு நடைபாதை இது. இத்தாலியில் உள்ள 'சட்டர் ஹவுஸ்' எனும் பகுதிக்குச் செல்லும் பாதையே இது.


விஜய் + தூவானம் இணைந்து வழங்கும் பரிசுப் போட்டி

பிரதி புதன்தோறும் Thoovaanam SMS ஊடாக கேட்கப்படும் பொது அறிவுக் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலிட்டு ரூபா. 8,000 பெறுமதியான 3 பரிசில்களையும் பெற்றிடுங்கள்.

வாராந்தம் இவ் 3 பரிசில்களையும் வெல்வதற்கான கேள்வியினை அறிந்து கொள்ள → அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் Thoovaanam SMS இனை செயற்படுத்திக்கொள்ளுங்கள்

Thoovaanam SMS
செயற்படுத்தும் முறை

F Thoovaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்
(இச்சேவை முற்றிலும் இலவசம்)

இவ்வார கூப்பன் - 04.10.2017
விடை : ..............................
பெயர் : ..............................
முகவரி : ....................
தொ.பே.இல: ..........................
பாடசாலை : ........................
..............................
கையொப்பம்

அனுப்ப வேண்டிய முகவரி :
3 பரிசில்கள்
04.10.2017
விஜய்
த.பெ.இல: 2037
கொழும்பு

3 பரிசில்கள் போட்டி - 20.09.2017
விடை: புறா
வெற்றியாளர்:
வி.சசிதரன்,
இளவாலை வடக்கு,
இளவாலை, யாழ்ப்பாணம்.

Gift sponsored by:
www.srijob.com






ஆங்கிலத்தில் கேள்வி கேட்கும் மற்றும் பதிலளிக்கும் முறைமை அடங்கிய E-Book
ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD
4000 ஆங்கில மாதிரி கடிதங்கள் அடங்கிய மென்பொருள்
Rs. 8,000 பரிசில்கள்


noolaham.org | aavanaham.org

இரத்தசேகை எனப்படும் அனீமியா (Anaemia) தற்போது இளம் வயதுப் பிள்ளைகள் மத்தியில் அதிகளவு காணப்படும் ஒரு நோயாகும். இளம் பிள்ளைகளில் 22 சதவீதமானவர்களுக்கு அதாவது, ஐவரில் ஒருவருக்கு இரும்புச் சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் இரத்த சோகையின் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். சமநிறைவான உணவுகளை உட்கொள்ளாமை, பிரதான உணவுகளைத் தவிர்த்து துரித உணவுகள் மீது அதிக ஆர்வம் காட்டுதல் என்பன இதற்கு முக்கிய காரணமாகும். எமது உடலில் உள்ள கலங்கள் சிறப்பாக இயங்குவதற்கு ஒட்சிசன் அவசியமாகும். கலங்களுக்கு அவசியமான இந்த ஒட்சிசனை கலக்கச்செய்வது இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களில் உள்ள ஹீமோகுளோபின் என்ற நிறமியாகும். இந்த ஹீமோகுளோபினில் ஏற்படும் குறைவு காரணமாகவே, இரத்தசோகை ஏற்படுகின்றது. ஹீமோகுளோபின் உருவாக்கத்திற்கும் இரும்புச் சத்து அவசியமாகும்.

# இளம் பிள்ளைகள் மத்தியில் அதிகரித்து வரும் இரத்தசோகை



## இரும்புச் சத்து குறைபாட்டிற்கான காரணங்கள்

இரும்புச் சத்து குறைபாட்டினால் ஏற்படும் இரத்தசோகைக்கு பல காரணங்கள் உண்டு.

1. அன்றாடம் நாம் உட்கொள்ளும் உணவுகளில் போதுமானளவு இரும்புச் சத்து இன்மை.
2. உணவில் உள்ள இரும்புச் சத்தை சரியாக உடல் உறிஞ்சிக் கொள்ளாமை.
3. நீண்ட கால இரத்தப் போக்கு (மூலநோய் மற்றும் மாதவிடாய் பிரச்சினைகள்)
4. பெண் பிள்ளைகளின் மாதவிடாய் இரத்தப் போக்கு.
5. ஒட்டுண்ணித் தொற்றுக்கள் (கொளுக்கிப் புழு நோய், மலேரியா போன்றன)

## ஏன் இரும்புச் சத்து அவசியம்?

1. சோம்பல் இன்றி உற்சாகமாகப் பணியாற்றுவதற்கு.
2. நினைவாற்றல் மற்றும் கவனிக்கும் ஆற்றல் பெருக்கத்திற்கு
3. உடல் மன வளர்ச்சி சரியான முறையில் நிகழ்வதற்கு
4. நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிப்புக்கு
5. கர்ப்பிணி காலத்தில் ஏற்படும் சிக்கல்களை தடுப்பதற்கு

## இரும்புச் சத்து உள்ளடங்கியுள்ள உணவுகள்

இரும்புச் சத்து உள்ள உணவு வகைகளை இரண்டாகப் பிரிக்க முடியும்.

1. ஹீம் இரும்பு
2. ஹீம் அற்ற இரும்பு



உண்ண வேண்டிய உணவுகள்

1. 'ஹீம் இரும்பு' என்பது இலகுவாக உடல் உறிஞ்சிக் கொள்ளும் இரும்புச் சத்து வகைகளாகும். இவற்றை மாமிச உணவுகளின் மூலம் பெற முடியும். இறைச்சி, மீன், கருவாடு, நெத்தலி என்பன இதில் அடங்கும்.

2. 'ஹீம் அற்ற இரும்பு' என்பது உடலினால் குறைவாக உறிஞ்சப்படும் இரும்புச் சத்து வகையாகும். முட்டை மற்றும் தாவர உணவுகளில் இருந்து இவற்றைப் பெற முடியும். உதாரணமாக, கடும் பச்சை நிறமான கீரை வகைகள், தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் (குரக்கன், சோளம், அரிசி, சோயா அவரை, கடலை, தட்டைப் பயறு, பருப்பு, அவரை, உளுந்து, சாரணை, தம்பலா, வல்லாரை, பொன்னாங்கன்னி, அகத்தி, முருங்கைக் கீரை, கரட் மற்றும் பீட்ரூட் இலைகள் என்பன).


## இரத்த சோகை காணப்படின் அறிந்துகொள்ளக் கூடிய அறிகுறிகள்



தவிர்க்க வேண்டிய துரித உணவுகள்

ஒரு சில அறிகுறிகள் மூலம் இரத்தசோகையினை அறிந்துகொள்ள முடியும்.

* வெளிறிப் போன தோற்றம், அதிக களைப்பு.
* தலைவலி, சுவாசிப்பதில் ஏற்படும் சிரமம்.
* அவதானம் மற்றும் நினைவாற்றல் குறைவு.
* கற்றல் குறைபாடுகள்.




## இரும்புச் சத்து உடலால் சிவர உறிஞ்சப்படாமைக்கான காரணங்கள்

உணவுகளின் சத்துக்கள் உடலால் சரிவர உறிஞ்சிக் கொள்ளப்படாமைக்கான காரணங்கள் சில உள்ளன. அவையாவன: பிரதான உணவுகளை உட்கொண்ட பின்பு தேநீர், கோப்பி போன்றவற்றை அருந்துவது இவற்றில் உள்ள கெப்பெய்ன், டெனின் போன்றன இரும்புச் சத்தினை உடல் உறிஞ்சிக் கொள்வதற்கு தடையாக உள்ளன. இவ்வாறான பானத்தினை அருந்தும் போது உணவு வேளைக்கு சுமார் ஒன்று அல்லது இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்பு அருந்துதல் சிறந்ததாகும்.


## இரும்புச் சத்தினை உடல் உறிஞ்சிக்கொள்ள மேற்கொள்ள வேண்டியவை



1. உணவுத் தயாரிப்பின் போது எலுமிச்சை, புளி, தக்காளி போன்றவற்றை சேர்த்துக் கொள்ளுங்கள்.
2. விற்றமின் சி அதிகளவில் உள்ள புதிய பழங்களை உணவுக்கு பின்னர் உட்கொள்ளுதல்.
3. கடலை, பயறு போன்ற தானியங்களை 24 மணி நேரம் ஊற வைத்து முளை விட்ட பிறகு சமையலுக்குப் பயன்படுத்துங்கள்.
4. முடிந்த வரையில் இறைச்சி, மீன், கருவாடு, நெத்தலி போன்றவற்றை சிறிதளவேனும் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து சாதனங்களும் மார்க்கங்களும்




உங்களைப் பற்றி இங்கே குறிப்பிடுங்கள்


## என் குறிப்பேடு




# கூழாங்கல் கைவேலைகள்











-நுஸ்ஜீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



01. படத்தில் காணப்படும் பிராணிகளைக் குறிப்பிடுக.

..............................................................

02. நீர்நிலையில் காணப்படுபவை யாவை?

..............................................................

03. படத்தில் காணப்படும் பிராணிகளில் தந்தம் உள்ள பிராணிகள் எவை?

..............................................................

04. நீர்நிலைக் கரையில் காணப்படும் பிராணிகளில் கொடியது எது?

..............................................................

| | | |
|---|---|---|
| குளம் | கூண்டு | மரப்பொந்து |
| வளை | கொட்டகை | கூடு |




நாயின் வாழிடம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
..............................




மாடுகள் கட்டப்படும் இடம் எது? ......................




பறவைகளின் வாழிடம் யாது? ......................




அணில் எங்கே வசிக்கின்றது?
..............................




தவளை இருக்கும் இடம் எது? ......................




எலியின் வசிப்பிடம் எது?
..............................




01. இங்கு காணப்படுபவை எவை?

..............................................................

02. கொடி வகைத் தாவரங்கள் எவை?

..............................................................

03. குடை விரித்தது போன்ற அமைப்பில் காணப்படுவது எது?

..............................................................

04. விதைகளைக் கொண்டவை எவை?

..............................................................



01. குளத்தில் காணப்படுபவை யாவை?

1. மீன்கள் 2. தாமரை, மீன்கள், தவளை 3. மீன்கள், தாமரை, நீர்

02. குளத்திற்கு அருகே ஒற்றைக் காலில் நின்றுகொண்டிருப்பது எது?

1. பருந்து 2. கொக்கு 3. நீர்க்காகம்

03. குளத்தில் .......................... நிறைந்துள்ளது.


1. மீன்கள் 2. பூக்கள் 3. நீர்

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கீழுள்ள சொற்களை எழுத்துக் கூட்டத்திற்குள் இனங்கண்டு நிறந்தீட்டுக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| C | B | R | E | A | D | C | P | Y | N |
| H | U | G | O | P | O | F | O | C | O |
| I | R | E | D | A | S | R | M | H | O |
| C | G | T | H | S | T | T | H | A | D |
| K | E | A | K | T | O | P | E | P | L |
| E | R | T | E | R | F | I | S | A | E |
| N | U | A | R | Y | F | Z | M | T | S |
| B | I | G | S | Q | E | Z | A | I | L |
| I | C | E | C | R | E | A | M | Q | L |
| C | H | O | C | O | L | A | T | E | S |




## விஜய் அறிவுக்கு விருந்து

## நிழற்றப்பட்ட பகுதியை பின்னத்தில் தருக



## குறுக்கெழுத்துப் போட்டி: 260

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | ■ | 2 |
| | 3 | ■ | 4 | | |
| 5 | | 6 | | ■ | ■ |
| | ■ | | ■ | 7 | |
| ■ | ■ | | ■ | ■ | 8 |
| 9 | | | | | ■ |

### மேலிருந்து கீழ்

1. ஜலதோஷம்.
2. இரண்டு.
3. சிறுபகுதி. (குழம்பியுள்ளது)
4. எப்பொழுதும்.
6. பல மாவட்டங்களை உள்ளடக்கிய பெரும் பகுதி.
8. வினாச்சொல் ஒன்று. (தலைகீழ்)

### இடமிருந்து வலம்


1. தாவரத்தின் பாகமொன்று.
3. 'வேகம்' என்றும் அர்த்தப் படுத்தலாம். (மாறியுள்ளது)
4. காய்ந்த இலை, குழை. (குழம்பியுள்ளது)
5. மன்னார்ப் பகுதியிலுள்ள பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ தேவாலயம்.
7. உனது.
9. திருமணம். (குழம்பியுள்ளது)

## குறுக்கெழுத்துப் போட்டி: 259

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 நா | ரா | ங் | 2 கி | ■ | ■ |
| ம | ■ | ■ | யை | ■ | ல் |
| 3 க | ல் | லூ | ரி | ■ | ழ |
| ள் | 4 கோ | ■ | ■ | ழி | 5 கு |
| ■ | ■ | வி | 6 பா | ■ | து |
| 7 வா | ள் | ■ | ர் | தி | 8 ஊ |

## அறிவுக்கு விருந்து (20.09.2017) விடைகள்

| | |
|---|---|
| ball (allb) | coat (aoct) |
| bite (tibe) | cane (ance) |
| boat (aobt) | duck (kucd) |





| | |
|---|---|
| 🔔 | B E L L |
| 👗 | D R E S S |
| 🪺 | N E S T |

## குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து சரியான சொல்லை எழுதுக

| | |
|---|---|
| rncouni ______ | terquar ______ |
| oldl ______ | nlae ______ |
| ordo ______ | palpe ______ |

## விடை தருக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு உதவும் செயலிகள்




கல்வி தொடர்பான பணிகளுக்கு உதவ எண்ணற்ற செயலிகள் இருக்கின்றன. இதில் டைம்டேபிள் எனும் செயலியையும் இணைத்துக்கொள்ள முடியும். இந்தச் செயலி வகுப்பு பாட அட்டவணையைக் குறித்து வைத்துக் கொண்டு, வகுப்பு நேரங்களை புறக்காமல் இருக்க உதவுகிறது. இதில் வகுப்புகள் நடைபெறும் நேரத்தைக் குறிப்பிடுவதோடு, மாணவர்கள் தங்களுக்குத் தரப்படும் வீட்டுப் பாடங்கள், விடுமுறை நாட்கள் போன்றவற்றையும் குறித்துக்கொள்ளலாம். வகுப்பில் எடுக்கும் குறிப்புகளையும் இதில் சேமிக்கலாம். முக்கியமாக வகுப்பு நடந்துகொண்டிருக்கும்போது, ஃபோனில் அழைப்பு வந்தால், அதை மௌனமாக்கும் வசதியும் இருக்கிறது. பாடசாலை பாடத்திட்டங்களை நிர்வகிப்பதில் இந்தச் செயலி மிகவும் உதவியாக இருக்கும். அத்துடன், எந்தச் சாதனத்திலிருந்து வேண்டுமானாலும் இதில் உள்ள தகவல்களை அணுகலாம்.

பார்ப்பதற்கு மனிதர்களைப் போலவே இருக்கும் விலங்கு கொரில்லா ஆகும். அப்படிப்பட்ட கொரில்லாக்கள் பற்றிய சுவையான சில தகவல்களைப் பார்ப்போமா?



# கொரில்லா உலகம்

நன்கு வளர்ந்த கொரில்லாக்கள் சராசரியாக 6 அடி உயரமும் 150 கிலோ எடையையும் கொண்டிருக்கும்.

கொரில்லாக்களால் மனிதர்களைப் போலவே கைகளை ஊன்றாமல் நடக்க முடியும். ஆனால், அவை அவ்வாறு நடக்க விரும்புவதில்லை.

கொரில்லாக்கள் இரண்டு கைகளையும் விரித்தால் சுமார் 8 அடி நீளம் வரை நீளும்.


கொரில்லாக்கள் மனிதர்களைப் போலச் சிரிக்கும். சத்தம் போட்டு அழும் ஆனால், அழும்போது கண்ணீர் வராது.

கொரில்லாக்கள் உடல் அசைவுகள், சத்தத்தின் மூலம் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும்.

கூட்டமாக வாழும் இயல்புடையவையாக கொரில்லாக்கள் உள்ளன. இளம் வயதுக் கொரில்லாக்களுக்கு உணவு சேகரிக்கும் முறை, குட்டிகளைப் பராமரிக்கும் முறை, வீடு கட்டும் முறை போன்றவற்றை மூத்த கொரில்லாக்கள் கற்றுக் கொடுக்கும்.

கொரில்லாக்களுக்குக் கோபம் வந்தால் கைகளைத் தூக்கி நெஞ்சில் அடித்துக் கொண்டு சத்தமிடும்.





அ.ஈநிட் றீயூபன்,
அமிர்தகழி விநாயகர் வித்தியாலயம்,
மட்டக்களப்பு.



கெ.டெரன்ஸ்,
க/வெஸ்ட்ஹோல் தமிழ் வித்தியாலயம்,
கெட்டபுலா.

# கைவண்ணங்கள்




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



இ.கோபிகிருஷ்ணன்,
யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



எஸ்.டிலீஷியா,
நல்லாயன் மகளிர் கல்லூரி,
கண்டி.



எஸ்.ஹப்ஸா,
கு/பறகஹதெனிய
தேசிய பாடசாலை,
வேஉட.



யே.நிக்கலஸ்,
மமா/கொத்/இந்துக் கல்லூரி,
இறம்பொடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைகளில் இருந்து உயிரி நிலக்கரி



திறந்தவெளி குப்பை குவிப்பு நிலங்களில் கரிம பகுதிகளை குறைந்த ஒட்சிசன் நிலையின்கீழ் தகனம் செய்து உயிரி நிலக்கரியை (Bio-coal) உருவாக்குவதில் ஹந்தான தேசிய அடிப்படை கல்வி நிறுவனத்தின் ஆய்வாளர்கள் வெற்றிகண்டுள்ளனர்.

இந்த உயிரி நிலக்கரியை குப்பை குவிப்பு நிலங்களின் மேற்பகுதியில் பரப்பிவிடுவதன்மூலம் குப்பைகளிலிருந்து வெளியாகும் காபனீரொட்சைட், மித்தேன் போன்ற பச்சைவீட்டு வாயுக்களும்; பென்சீன், டொலுவின், எத்தில் பென்சீன், சைலின் போன்ற புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய ஆவியாகும் தன்மை கொண்ட கரிம சேர்மங்களும் உறிஞ்சிக்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பான ஆய்வுகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி மென்திகா வித்தானகேயின் தலைமையில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் பி.ஜி.என். செவ்வந்தி ஆகியோரின் ஒத்துழைப்புடன், கண்டி தேசிய அடிப்படை கல்வி நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.






## உயிரி நிலக்கரியினால் மேலதிக பயன்கள்

குப்பைகளினால் நிலத்தடி நீரில் சேரும் கழிவுகளை தடுக்கக்கூடிய ஒரு தடுப்பாக இந்த உயிரி நிலக்கரியை பயன்படுத்திக்கொள்ளலாம். அத்துடன், வீடுகளில் நீர் சுத்திகரிப்பு செயற்பாடுகளுக்காகவும் இதனை பயன்படுத்திக்கொள்ள முடிவதுடன், விவசாயத்தில் பயிர்ச் செய்கைகளை வளப்படுத்திக் கொள்ள உதவும் கரிம உரமாகவும் உயிரி நிலக்கரியைப் பயன்படுத்தலாம். மேலும், சில நிலப்பகுதிகளில் மண்ணில் காணப்படும் அமிலத் தன்மையை குறைத்து, மண்ணை வளப்படுத்தவும் உயிரி நிலக்கரி உதவும்.

உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
The SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

පුතා: අම්මේ! අද පාසල් යන්නේ කොහොමද? හොඳටම වහිනවනේ.
அம்மே! அத பாசல் யன்னே கொஹொமத? ஹொந்தட்டம வஹினவனே.
மகன்: **அம்மா! இன்றைக்குப் பாடசாலை போவது எப்படி? நன்றாக மழை பெய்கிறதே.**

අම්මා: ඒක තමා පුතා මමත් බැලුවේ. හරි වැස්ස.
ஏக்க தமா புதா மமத் பெலுவே. ஹரி வெஸ்ஸ.
அம்மா: **அதுதான் மகன் நானும் பார்த்தேன். நல்ல மழை.**

පුතා: අම්මේ! ඊයේ රෑ ඉඳලම වහිනවාද?
அம்மே! ஈயே ரே இந்தலம வஹினவாத?
மகன்: **அம்மா! நேற்று இரவில் இருந்தே பெய்கிறதா?**

අම්මා: ඔව් පුතා, ඊයේ රෑ ඉඳලම වහිනවා.
ஒவ் புதா, ஈயே ரே இந்தலம வஹினவா.
அம்மா: **ஆம் மகன், நேற்று இரவில் இருந்தே பெய்கிறது.**

පුතා: අපේ පිට්ටනියේ නම් පොඩ්ඩක් වැස්සත් වතුර පිරෙනවා.
அப்பே பிட்டனியே நம் பொட்டக் வெஸ்ஸத் வத்துர பிரெனவா.
மகன்: **எங்கள் மைதானத்திலென்றால் கொஞ்சம் மழை பெய்தாலும் நீர் நிறைகிறது.**

අම්මා: පුතාලගේ පන්තිය තියෙන්නෙ පිට්ටනිය ළඟ නේද?
புதாலகே பந்திய தியென்னெ பிட்டனிய லங்க நேத?
அம்மா: **மகனின் வகுப்பு மைதானத்திற்கு அருகில்தானே இருக்கிறது?**

පුතා: ඔව් අම්මේ. පිට්ටනිය මැද්දෙන් ගිහින් තමයි පන්තියට යන්න ඕනේ.
ஒவ் அம்மே. பிட்டனிய மெத்தென் கிஹின் தமய் பந்தியட்ட யன்ன ஓனே.
மகன்: **ஆம் அம்மா. மைதானத்தின் நடுவே சென்றுதான் வகுப்புக்குப் போக வேண்டும்.**

අම්මා: එහෙනම් මේ වැස්සට හොඳට වතුර පිරිලා ඇති.
எஹெனம் மே வெஸ்ஸட்ட ஹொந்தட்ட வத்துர பிரிலா எத்தி.
அம்மா: **அப்படியானால் இந்த மழைக்கு நன்றாக நீர் நிறைந்திருக்கும்.**

පුතා: ඔව් අම්මේ. අද පාසල් යන්න වෙන්නේ නැහැ.
ஒவ் அம்மே. அத பாசல் யன்ன வென்னே நெஹெ.
மகன்: **ஆம் அம்மா. இன்று பாடசாலை போக முடியாது.**

**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. පාසල් ............ කොහොමද?
2. ............ ඉඳලම වහිනවා.
3. ............ යන්න ඕනේ.
4. වතුර ............ ඇති.




**இறந்தகால தனி வாக்கியம் மற்றும் எதிர்கால தனி வாக்கியம்**

மேற்காணும் இரு வகை வாக்கியங்களையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) I told the whole story yesterday.
நான் நேற்று முழுக் கதையையும் கூறினேன்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

ஆ) I will tell the whole story tomorrow.
நான் நாளை முழுக் கதையையும் கூறுவேன்.
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ I told. (Past tense)
நான் கூறினேன். (இறந்தகாலம்)

★ I will tell. (Future tense)
நான் கூறுவேன். (எதிர்காலம்)

★ — ★ — ★ — ★

இ) You saw the person yesterday.
நீ நேற்று அந்த நபரை பார்த்தாய்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

ஈ) You will see the person tomorrow.
நீ அந்த நபரை நாளை பார்ப்பாய்.
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ You saw. (Past tense)
நீ பார்த்தாய். (இறந்தகாலம்)

★ You will see. (Future tense)
நீ பார்ப்பாய். (எதிர்காலம்)

★ — ★ — ★ — ★

உ) We paid the money yesterday.
நாங்கள் பணத்தை நேற்றுச் செலுத்தினோம்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

ஊ) We will pay the money tomorrow.
நாங்கள் பணத்தை நாளை செலுத்துவோம்.
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ We paid. (Past tense)
நாங்கள் செலுத்தினோம். (இறந்தகாலம்)

★ We will pay. (Future tense)
நாங்கள் செலுத்துவோம். (எதிர்காலம்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகளிர் வீராங்கனைகள் சளைத்தவர்கள் அல்ல



என்டி மரே

மகளிர் விளையாட்டு வீராங்கனைகள் எந்தவகையிலும் ஆடவர் விளையாட்டு வீரர்களுக்கு சளைத்தவர்கள் அல்ல என பிரிட்டனின் டென்னிஸ் வீரர் அன்டி மரே தெரிவித்துள்ளார். அவர் கலந்துகொண்ட பேட்டி நிகழ்ச்சியொன்றிலேயே, இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஆடவர், மகளிர் கலவை டென்னிஸ் போட்டிகளின்போது, மகளிர் வீராங்கனைகளின் திறமையை, ஈடுபாட்டை தான் நான்றாக இனங்கண்டுகொண்டதாகவும் மரே தெரிவித்துள்ளார்.

மகளிர் டென்னிஸ் போட்டிகளில் வீராங்கனைகள் அணிகின்ற ஆடைகளை சில ஊடகங்கள் விமர்சிப்பதையிட்டு தனது அதிருப்தியை தெரிவித்தபோதே மரே மேற்கண்ட கருத்துக்களையும் பகிர்ந்துகொண்டார். தான் எப்போதும் வீராங்கனைகளுக்காக குரல் கொடுப்பேன் எனவும் மரே மேலும் தெரிவித்துள்ளார்.

# பராலிம்பிக் நீச்சல் போட்டி ஒத்திவைப்பு...




மெக்ஸிக்கோ நகரில் கடந்த வாரம் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கங்களின் காரணமாக, ஏற்பட்ட அனர்த்தங்களைக் கவனத்திற்கொண்டே பராலிம்பிக் நீச்சல் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தன. நில நடுக்கத்தில் கட்டடமொன்று சரிந்து வீழ்ந்ததில் 200 இற்கும் மேற்பட்டவர்கள் மரணமடைந்ததுடன், ஏராளமானவர்கள் காயங்களுக்கும் உள்ளாகியிருந்தனர்.

மெக்ஸிக்கோ நகரில் நடைபெறவிருந்த பராலிம்பிக் நீச்சல் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டபோதிலும் மீண்டும் இப்போட்டிகள் எப்போது நடைபெறும் என இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

பராலிம்பிக் நீச்சல் போட்டிகள் கடந்த செப்டெம்பர் 30 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 06 ஆம் திகதிவரை நடைபெற முன்னர் ஏற்பாடாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் வீரருக்கு வாகனம் செலுத்தத் தடை விதிப்பு



மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்திற்காக இங்கிலாந்தின் முன்னாள் கால்பந்தாட்ட அணியின் தலைவரான வேன் ருனிக்கு எதிராக இரண்டு வருட காலத்திற்கு வாகனம் ஓட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், 100 மணித்தியாலங்களுக்கு சமூக சேவையில் அவர் ஈடுபட வேண்டும் எனவும் அமெரிக்காவின் நீதிமன்றமொன்று தீர்ப்பு வழங்கியுள்ளதுடன், 170 பவுண்களை அபராதமாக அவர் செலுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே வேளை மதுபோதையில் வாகனம் செலுத்தியதையிட்டு சகலரிடமும் தான் மன்னிப்புக் கோருவதாக ருனி தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பதக்கத்தை மீள வழங்கும் பராலிம்பிக் வீராங்கனை



2012 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற பராலிம்பிக் போட்டியில் 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெற்றியீட்டிய வெள்ளிப்பதக்கத்தை ஒலிம்பிக் கமிட்டியிடம் மீள ஒப்படைப்பதாக இங்கிலாந்தின் பராலிம்பிக் வீராங்கனையான பெத்தனி வுட்வர்ட் தெரிவித்துள்ளார். மேலும், இவரது விளையாட்டுப் பயிற்சிகளுக்காக இங்கிலாந்து வழங்குகின்ற நிதியுதவியையும் அவர் ஏற்க மறுத்துள்ளார்.

பராலிம்பிக் போட்டிகளுக்கான போட்டியாளர்கள் தெரிவு தொடர்பில் ஏற்பட்டுள்ள அதிருப்தியின் காரணமாகவே, இவர் தனது எதிர்ப்பை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பாகிஸ்தான் வீரருக்கு போட்டித் தடை



பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் கலிட் லத்தீஃப்க்கு 5 வருடகால போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது. திட்டமிட்டு எதிரணிக்கு போட்டி வெற்றியை விட்டுக்கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே, லத்தீஃப்க்கு போட்டித் தடையை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விதித்துள்ளது. அண்மையில் நடைபெற்ற பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டிகளின்போது, எதிரணிக்கு சார்பாக நடந்துகொண்டமை நிரூபிக்கப்பட்டமையின் காரணமாகவே, இப்போட்டித்தடைக்கு இவர் இலக்காகியமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவடைந்

# கடல் ஆ

உலகில் கடல் ஆமைகளின் தோற்றம் சுமார் 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. டைனோசர் யுகத்திலும் இவை வாழ்ந்துள்ளதாக கூறப்படுகின்றது. இத்தனை வருட கால வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட கடல் ஆமைகள், இன்றளவில் அழியும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளன. இலங்கையின் கொஸ்கொட, அஹுன்கல்ல, இந்துருவ, ரெக்கெவ மற்றும் பூந்தல ஆகிய கரையோரப் பகுதிகளுக்கு கடல் ஆமைகள் பெருமளவில் வருகின்றன. இனப்பெருக்க காலத்திலேயே, அவை இவ்வாறு வருகின்றன. இலங்கை கரையோரத்தை நாடி வருகின்ற கடல் ஆமைகள் பற்றி அறிந்துகொள்வோம்.

## பச்சைக் கடல் ஆமை - Green turtle



* விலங்கியல் பெயர்: *Chelonia mydas*
* நீளம்: சுமார் ஒரு மீற்றர்.
* எடை: 250 கிலோகிராம்.
* சிறப்பம்சம்: இந்த கடல் ஆமைகள், கடல் புற்கள் வளர்ந்துள்ள பகுதிகளில் செறிந்து வாழும். ஒரு தவணையில் 90 முதல் 180 முட்டைகள் வரை இடும். குஞ்சு பொரித்த காலத்தில் மாமிச உணவுகளை உட்கொள்ளும். பின்னர் கடல் புற்கள், பாசிகள் போன்றவற்றை உட்கொள்ளும் தாவர உண்ணிகளாக மாறிவிடுகின்றன.

## சிற்றாமை - Olive ridley turtle



* விலங்கியல் பெயர்: *Lepidochelys olivacea*
* நீளம்: கடல் ஆமைகளில் சிறிய இனமாகும். இதன் நீளம் 65 சென்ரிமீற்றர்.
* எடை: 40 கிலோகிராம்.
* சிறப்பம்சம்: கிளியின் அலகைப் போன்ற வாய்ப்பகுதி இருப்பதால் 'கிளி அலகு கடல் ஆமை' என்றும் அழைக்கப்படுகின்றது. கடல் தாவரங்களை உட்கொள்ளும். இவற்றின் பிரதான உணவு பாசிகள் ஆகும். இனப்பெருக்க காலத்தில் ஒரு தவணையில் 50 முதல் 190 வரையிலான முட்டைகளை இடும்.

## தோல் கடல் ஆமை - Leatherback turtle



* விலங்கியல் பெயர்: *Dermochelys coriacea*
* நீளம்: 170 சென்ரிமீற்றர் முதல் 230 சென்ரிமீற்றருக்கு இடையில்.
* எடை: 600 கிலோகிராம்.
* சிறப்பம்சம்: இது சமுத்திரங்களில் சிறந்த முறையில் தகவமைப்புக்குள்ளான அனைத்தும் உண்ணி கடல் ஆமையாகும். பாசிகள், இறால்கள் மற்றும் சிறு நத்தை இனங்கள் என்பன இவற்றின் பிரதான உணவுகளாகும்.




## வாழ்க்கை முறை

கடல் ஆமைகள் 25 முதல் 30 ஆண்டுகளில் இனப்பெருக்கத்திற்கு தயாராகி விடுகின்றன. இவை கடற்கரைப் பகுதிக்கு வந்தே முட்டைகளை இடுகின்றன. சுமார் 60 நாட்களில் அந்த முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவரும்.


## கடல் ஆமைகள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள்

★ கடற்கரைப் பகுதிகளில் இடப்படும் முட்டையிலிருந்து வெளியேறும் குஞ்சுகள், உடனே கடலை நோக்கி விரைவாகச் செல்ல ஆரம்பிக்கின்றன. இதன்போது எதிரிகளின் தாக்குதல் தீவிரமாக இருக்கும். இந்தப் பருவத்தில் பறவைகளும் மீன்களும் இவற்றை தமது உணவாக உட்கொள்கின்றன.

★ முட்டையிடக் கரைக்கு வரும் கடல் ஆமைகளின் இறைச்சிகளையும் முட்டைகளையும் மனிதர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# து வரும் மைகள்



## அழுங்கு கடல் ஆமை - Hawksbill turtle

* விலங்கியல் பெயர்: *Eretmochelys imbricata*
* நீளம்: நன்கு வளர்ச்சியடைந்த ஆமையின் நீளம் 80 சென்ரிமீற்றர் முதல் 120 சென்ரிமீற்றர் வரை.
* எடை: நன்கு வளர்ச்சியடைந்த ஆமையின் எடை 50 கிலோகிராம்.
* சிறப்பம்சம்: வரையறுக்கப்பட்ட பகுதிகளில் பவளப்பாறைகளை அண்டியதாக வாழும் கடல் ஆமை இனமாக இது கருதப்படுகின்றது. இது மாமிச உண்ணியாகும். குறிப்பாக, பவளப்பாறைகளில் வாழும் உயிரினங்கள் மற்றும் கடற்பாசி போன்றவற்றை உட்கொள்கின்றன.



## பெருந்தலை கடல் ஆமை - Loggerhead turtle

* விலங்கியல் பெயர்: *Caretta caretta*
* நீளம்: சுமார் ஒரு மீற்றர்.
* எடை: 180 கிலோகிராம்.
* சிறப்பம்சம்: வெப்பமான கடற்பரப்புகளில் அதிகளவில் வாழும். ஒரு தவணைக்கு 50 முதல் 190 வரையிலான முட்டைகளை இடும். அனைத்தும் உண்ணி இனத்தைச் சேர்ந்தது. மெல்லுடலிகள்,கடல் கூனிகள் மற்றும் கடற்பாசிகள் என்பனவற்றையும் உட்கொள்ளும்.



உணவாக உட்கொள்கின்றனர்.

★ மீன்களைப் பிடிப்பதற்காக மீனவர்கள் பயன்படுத்தும் வலைகள், நைலோன் வலைகள் என்பனவற்றில் அகப்படும் கடல் ஆமைகளையும் மனிதர்கள் உணவாக உட்கொள்கின்றனர்.

★ கடலில் இடப்படும் பொலிதீன் பைகளை உணவாகக் கருதி அவற்றை உட்கொள்வதனால், கடல் ஆமைகள் பரிதாபமாக உயிரிழக்கின்றன.

★ முட்டையிட கடற்கரைப் பகுதிகளுக்கு வரும் பெண் கடல் ஆமைகள், அருகாமையில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் வீடுகளிலிருந்து வெளியாகும் ஒளி மற்றும் இரைச்சல் காரணமாக குழப்பத்திற்குள்ளாகின்றன. இவ்வாறான சூழலில் முட்டைகளிலிருந்து வெளியாகும் குஞ்சுகளின் கடலை நோக்கிய பயணப் பாதையும் மாறுபடுகின்றன.

### பாதுகாப்பு நடைமுறைகள்

★ கடல் ஆமைகளை உணவாக உட்கொள்ளும் மக்களிடம் அவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துதல்.

★ ஆமைகளின் மேலோட்டினைப் பயன்படுத்தி பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதனை தடுத்தல். அத்தகைய வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கு மாற்று வழிமுறைகளைக் காட்டுதல்.

★ கடல் மாசடைவினைக் குறைக்க நடவடிக்கை எடுத்தல்.

### இனப்பெருக்க நிலையங்கள்

இலங்கையின் காலி மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் கடல் ஆமை இனப்பெருக்க நிலையங்கள் அமைந்துள்ளன. அந்தவகையில், காலி மாவட்டத்தில் *14* நிலையங்களும் கொழும்பு மாவட்டத்தில் ஒரு நிலையமும் இயங்குகின்றன. இந்த நிலையங்கள் கடல் ஆமைகள் இனப்பெருக்க விடயங்களில் சிறந்த பங்களிப்பினை ஆற்றி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


#02
மணிக்கு கி.மீ. 126
ஃபோனர்ஸ் (Foners)



#01
மணிக்கு கி.மீ. 130
வேர்ல்ட் இஸ் நொட் இனாஃப்
(World is not Enough )



#03
மணிக்கு கி.மீ. 126
அலம்ஷார்
(Alamshar)





#10
மணிக்கு கி.மீ. 100
சன் ஆர்க் (Sun Ark)



#06
மணிக்கு கி.மீ. 111
ப்ரேவ் ச்செலேஞ்சர்
(Brave Challenger)



#04
மணிக்கு கி.மீ. 117
கென்டரி ஈகள்
(Gentry Eagle)



#07
மணிக்கு கி.மீ. 105
எர்மிஸ்
(Ermis²)



#08
மணிக்கு கி.மீ. 101
நோபொடி (Nobody)



#05
மணிக்கு கி.மீ. 111
118 வொலிபவர்
(118 WallyPower)

#09
மணிக்கு கி.மீ. 100
டலோலி (Daloli)



# சொகுசு கப்பல்கள் 10



வேகமான் மீன்
(Sailfish)
மணிக்கு கி.மீ. 110

# உலகில் வேகமான...



வேகமான மனிதன்
உசேன் போல்ட்
மணிக்கு கி.மீ. 44

**கை**த்தொழில் புரட்சியின் பின்னர் மனிதன் போக்குவரத்து சாதனங்கள் உள்ளிட்ட இயந்திர சாதனங்களை பெருந்தொகையாக உற்பத்தி செய்ய ஆரம்பித்தான். அத்தோடு, அவ்வகை சாதனங்களை மிக வேகமாக இயங்கும் விதத்தில் தயாரித்து அறிமுகப்படுத்த மனிதன் பெரு முயற்சிகளை எடுத்தான். அதற்கமைய, மிக விரைவுப் புகையிரதம் அல்லது புலட் ட்ரெயின் எனும் எண்ணக்கரு ஒன்று போக்குவரத்துத் துறையில் உதயமாகியதும் இக்கால கட்டத்தில் தான். விமானங்களில் மிக வேகமான விமானங் களை தயாரிக்க மனிதன் முயற்சித்தான். அந்த வகையில், மனிதன் இதுவரை தயாரித்த மோட்டார் வாகனங்கள் மற்றும் சொகுசு கப்பல்களிடையே அண்மையில் தயாரித்த மிக வேகமானவைகள் குறித்த தகவல்கள் சில வருமாறு;

# மோட்டார் வாகனங்கள் 11

#01
மணிக்கு கி.மீ. 435
ஹென்னெசேஸ் ஸ்
வெனம் ஜிட்
சில காரணங்களால் தகுதி பெறவில்லை. அதனால், முதலாம் இடத்தை (இலக்கம் 01) புகாட் வெய்ரோன் சுப்பர் ஸ்போர்ட் காருக்கு கிடைத்துள்ளது





#04
மணிக்கு கி.மீ. 411
எஸ்.எஸ்.சீ.அல்டிமேட் ஏரோ

#02
மணிக்கு கி.மீ. 431
புகாட் யெவ்ரோன்
சுப்பர் ஸ்போர்ட்



#03
மணிக்கு கி.மீ. 420
புகாட் ஷிரொன்



#07
மணிக்கு கி.மீ.
390
கொயெனெக் செக்
அகேரா R



#05
மணிக்கு கி.மீ.
399
சாலின் எஸ் 7
டிவின்-டர்போ



#06
மணிக்கு கி.மீ.
394
கொயெனெக்செக்
CCX





#08
மணிக்கு கி.மீ.
387
மெக்லர்ன் F01

#10
மணிக்கு கி.மீ. 374
சென்வோ ST1



#09
மணிக்கு கி.மீ. 383
பெகானி ஹுஅய்ரா



#11
மணிக்கு கி.மீ. 362
கம்பர்ட் அப்பலோ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்டமீரா குகைச் சித்திரம்



அல்டமீரா குகைச் சித்திரம் 1880 ஆம் ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டது.
இந்த குகைச் சித்திரம் ஸ்பெயினில் அமைந்துள்ளது. குகைச் சித்திரங்களில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட சித்திரம் இதுவாகும். மாடுகளின் உருவங்கள் பல இதில் சித்தரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசத்திலிருந்து வட துருவத்தினை நோக்கி இடம்பெயர்ந்த பல விலங்குகளின் உருவங்கள் இந்த சித்திரத்தின் தொனிப் பொருளாகக் காணப்படுகின்றது. பனி மான், ஓநாய், காட்டுப் பன்றி, காட்டுக் குதிரை, மெம்மூத் மற்றும் பைசன் மாட்டின் உருவங்கள் இவற்றுள் அடங்கும். இந்த விலங்குகள் குதித்தல், ஓடுதல், நடமாடுதல், நின்று கொண்டிருத்தல் போன்ற நிலைகளில் வரையப்பட்டுள்ளன. இதற்கு சிவப்பு, மஞ்சள், கறுப்பு ஆகிய நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதில் பைசன் மாட்டின் உருவம் உயிரோட்டமுள்ளதாகக் காணப்படுகின்றது. 'திருவானா' கற்கள் மூலம் வெளிச்சத்தினைப் பெற்று இந்த சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. இந்த சித்திரங்கள் சமமான பரப்பில் அன்றி கற்பாறை சுவற்றில் துருத்திக் கொண்டிருக்கும் பகுதிகளிலேயே வரையப்பட்டுள்ளன. ஒரு சில சித்திரங்கள் தெளிவற்றுள்ளன. ஒன்றின் மீது ஒன்று வரையப்பட்டுள்ளமையே, இதற்கு காரணமாகும்.

செம்மான், மாடு, கருவுற்ற காண்டா மிருகம், ஓய்வு பெறும் பைசன் ஆகியன தத்ரூபமாக வரையப்பட்டுள்ளன. உருவங்களைச் சுற்றிக் கோடுகள் வரையப்பட்டு உருவங்கள் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இந்த சித்திரங்கள் மூலம் ஆதி மனிதர்களின் வாழ்க்கை முறையும், அவர்களிடம் காணப்பட்ட அழகியல் ஞானமும் எடுத்துக் காட்டப்படுவதாகவே உள்ளது.











noolaham.org | aavanaham.org

## மின் விபத்து எச்சரிக்கை

மின்சாரத்தால் தீ விபத்து ஏற்பட்டால் நீரை ஊற்றி அணைக்க முயலக்கூடாது. ஏனெனில் மின் தாக்கம் எமக்கு ஏற்படக் கூடும். நீரானது தீயை பரவச் செய்யும். அதனால் மின் ஒழுக்கினால் தீ விபத்து ஏற்படும்போது மணலைக் கொண்டு அணைக்க முயலுங்கள். மணல் தீயை பரவச் செய்யாது.



## மாணவர் கழகம்

'விஜய்' மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்


அனுப்ப வேண்டிய முகவரி
'விஜய்' மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

பெயர் :..............................................................
..............................................................
முகவரி:..............................................................
..............................................................
..............................................................

படத்தை இங்கே ஒட்டவும்

பாடசாலையின் பெயர் :..............................................................
..............................................................
வகுப்பு :..............................................
திகதி:................................ ..............................................
பெற்றோர் கையொப்பம்

## உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்புங்கள்



'விஜய்' வாசகர்களே...

'விஜய்' பத்திரிகையில் மாணவர்களின் ஆக்கப் படைப்புக்களுக்கு களம் கொடுக்கும் 'மாணவர் ஆக்கங்கள்' பகுதியை மீண்டும் ஆரம்பிக்க உள்ளோம். கதை, கவிதை, கட்டுரை, கவர்ந்த காட்சி, சமுதாயக் கருத்துக்கள், ரசித்த காட்சிகள், மறக்க முடியாத சம்பவங்கள் என பலவிதமான ஆக்கங்களையும் நீங்கள் அனுப்பலாம். அவை சுருக்கமாக இருத்தல் வேண்டும். உங்கள் திறமையை வெளிப்படுத்த இந்த களத்தைப் பயன்படுத்துங்கள். எனவே, அவை உங்கள் சொந்தப் படைப்புகளாக இருக்கட்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
மாணவர் ஆக்கங்கள்,
'விஜய்'
த.பெ.இல-2037,
கொழும்பு.



## மேல் மாகாண கலை, கலாசார அமைச்சு நடாத்தும்

# புதுமுக எழுத்தாளர் போட்டி - 2017

ஊடக அனுசரணை: விஜய்

மேல் மாகாண புதுமுக எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இலக்கியப் போட்டியொன்றை நடாத்த மேல் மாகாண கலை, கலாசார அமைச்சு திட்டமிட்டுள்ளது. கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நிரந்தர வதிவாளர்கள் இதில் கலந்துகொள்ள முடியும். புதுமுக எழுத்தாளர் என்ற ரீதியில் தமது பெயரில் இதுவரை எந்தவோர் ஆக்கத்தையும் பிரசுரிக்காதவராக இருத்தல் வேண்டும்.

1. புதுமுக எழுத்தாளருக்கான நாவல் போட்டி **(20,000 முதல் 25,000 சொற்கள் வரை)**
2. புதுமுக எழுத்தாளருக்கான சிறுகதைப் போட்டி **(750 முதல் 1,000 சொற்கள் வரை)**
3. புதுமுக எழுத்தாளருக்கான மரபுக் கவிதைப் போட்டி **(40 முதல் 60 வரையிலான வரிகள்)**
4. புதுமுக எழுத்தாளருக்கான புதுக்கவிதைப் போட்டி **(40-60 வரிகள்)**
5. புதுமுக பாடலாசிரியருக்கான போட்டி **(பாடுவதற்கு தகுந்த சொற்களின் எண்ணிக்கை)**

### விபரங்களும் நிபந்தனைகளும்

01. போட்டியாளர் ஒருவர் ஒரு போட்டிக்காக ஒரேயொரு ஆக்கத்தையே சமர்ப்பிக்கலாம். எனினும், அவர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் கலந்துகொள்ள முடியும்.
02. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் விண்ணப்பதாரி 16-25 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
03. சகல ஆக்கங்களும் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். வேறோர் ஆக்கத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகவோ, ஒத்ததாகவோ, தழுவலாகவோ இருக்கக்கூடாது. அத்துடன், இதற்கு முன்னர் வெளிவராத ஆக்கமாகவும் இருத்தல் வேண்டும்.
04. சகல விண்ணப்பப் படிவங்களுடனும் கிராம உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொண்ட வதிவிட சான்றிதழ்/ உறுதிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படல் வேண்டும்.
05. சகல ஆக்கங்களும் A4 தாளில் ஒருபக்கம் மாத்திரம் தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டதாகவோ அல்லது கணினி தட்டச்சு செய்யப்பட்டதாகவோ இருத்தல் வேண்டும். தேவைக்கேற்ப தாள்களை இணைத்துக்கொள்ளலாம்.
06. சகல ஆக்கங்களுடனும் விண்ணப்பப் படிவம் இணைக்கப்படல் வேண்டும். போட்டியாளரை இனங்காணும் விதத்தில் எவ்வித அடையாளங்களும் ஆக்கங்களிலோ, பிரதிகளிலோ இருக்கக்கூடாது. (மாதிரி விண்ணப்பப் படிவம் அருகே வழங்கப்பட்டுள்ளது)
07. ஒவ்வோர் ஆக்கமும் வெவ்வேறாக அனுப்பப்படல் வேண்டும்.
08. ஆக்கங்களை அனுப்பும்போது, மூல ஆக்கத்தை அல்லது அதன் மூன்று பிரதிகளை அனுப்பவேண்டும். தெரிவுசெய்யப்படாத ஆக்கங்களின் பிரதிகள் மீள அனுப்பப்பட மாட்டா.
09. ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017 ஒக்டோபர் 15. குறித்த தினத்திலோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கும் வகையில் கீழ் காணும் முகவரிக்கு ஆக்கங்களை பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் பெயர் எழுதப்படல் வேண்டும்.



முகவரி: மேல் மாகாண புதுமுக எழுத்தாளர் போட்டி 2017
செயலாளர்
கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு,
மேல் மாகாணம்,
இல:89, ரன்மகபாய, பத்தரமுல்லை.

10. மேல் மாகாண புதுமுக எழுத்தாளர் போட்டி சம்பந்தமாக நடுவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்மானமாகும்.

### மேல் மாகாண புதுமுக எழுத்தாளர் போட்டி 2017

01. போட்டியின் பெயர்: ..............................................
02. மொழி மூலம்: ..............................................
03. போட்டியாளரின் முழுப் பெயர்: ..............................................
04. புனைபெயர்: ..............................................
05. நிரந்தர முகவரி: ..............................................
06. மாவட்டம்: ..............................................
பிரதேச செயலகப் பிரிவு: ..............................................
07. பிறந்த திகதி: ..............................
அடையாள அட்டை இலக்கம்: ..............................
08. 2017.10.31இல் வயது: ..................
வருடம்: .............. மாதம்: .............. தினங்கள்: ..............
09. பால்: ..................
10. பாடசாலை அல்லது தொழில்புரியும் இடம்: ..............................
..............................................
11. தொலைபேசி இலக்கம்: ..............................................
மின்னஞ்சல் முகவரி: ..............................................
12. இதற்கு முன் உங்கள் பெயரில் ஆக்கமேதும் வெளியாகி உள்ளதா?
..............................
13. ஆக்கத்தின் பெயர்: ..............................................
14. ஆக்கத்தில் அடங்கியுள்ள வசனங்கள் அல்லது வரிசைகளின் எண்ணிக்கை: ..............................
15. மூன்று பிரதிகளில் முன்வைத்தீர்களா? ..............................
16. உங்களின் சுய ஆக்கமா? ..............................
17. உங்களை இனங்காணும் ஏதேனுமோர் அடையாளம் உங்கள் ஆக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதா? ..............................
18. மேல் மாகாணத்தில் நிரந்தரவதிவாளரான கால எல்லை: ..................
19. கிராம உத்தியோகத்தரின் வதிவிட உறுதிச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? ..............................

மேற்குறித்த விபரங்கள் அனைத்தும் உண்மை எனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகிறேன். இப்போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்மானம் என ஏற்றுக்கொள்கிறேன்.

திகதி: 2017.................... போட்டியாளரின் கையொப்பம்
..............................

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு கையடக்க கருவியின் மூலம் புற்றுநோய் திசுக்களை பத்தே நொடிகளில் அடையாளம் கண்டுவிட முடியும் என டெக்சாஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்தக் கருவியானது, வேகமாகவும், பாதுகாப்பாகவும் மட்டுமல்லாமல் கூடுதல் துல்லியத்துடனும் புற்றுநோய்க் கட்டிகளைக் கண்டறிந்து அகற்றும் அறுவை சிகிச்சையை மேற்கொள்ள உதவும் என அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

# பத்தே நொடிகளில் புற்றுநோய் திசுக்களை கண்டறியும் 'பேனா'






சிகிச்சைக்குப் பின்னர் ஏதாவது, புற்றுநோய் அணுக்கள் உடலைவிட்டு வெளியேறாமல் இருந்துவிடும் சந்தர்ப்பத்தைத் தவிர்க்க இது உதவும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றனர்.

## இந்த கருவி எப்படிச் செயல்படுகிறது?

அறுவை சிகிச்சையின்போது, புற்றுநோய் அணுக்கள் இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் இடத்தில் இந்தப் பேனாவால் ஒரு துளி நீர் செலுத்தப்படும். உயிரோடு இருக்கும் செல்களில் உள்ள ரசாயனங்கள் அந்த நீர்த் துளியில் நுழையும். அப்போது அந்தத் நீர்த் துளி ஆய்வுக்காக பேனாவால் உறிஞ்சப்படும்.

ஒவ்வொரு நொடிக்கும் பல்லாயிரக்கணக்கான ரசாயனங்களை அளவிடக்கூடிய 'ஸ்பெக்ட்ரோமீற்றர்' எனச் சொல்லப்படும் நிறமாலைமானியுடன் இந்தப் பேனா பொருத்தப்படும். இதன் ஆய்வுமுடிவுகளில் இருந்து கிடைக்கும் ரசாயன ரேகைகள் அந்தத் திசுக்கள் ஆரோக்கியமான திசுக்களா? இல்லை புற்றுநோய் வந்த திசுக்களா? என்பது குறித்து மருத்துவருக்கு தெரியப்படுத்தும். அதன் பின்னர் புற்றுநோய் தொடர்பான மேலதிக சிகிச்சைகளை நோயாளிக்கு மேற்கொள்ள முடியும் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

## தெரிந்துகொள்வோம்



தனியாரின் ஏகபோக உரிமையாக இருந்த இலங்கை பொது போக்குவரத்துத்துறை எந்த ஆண்டில் யாருடைய ஆட்சிக் காலத்தில் அரசுடமையாக்கப்பட்டது?

**1958 ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில்**



'நாடாளுமன்றங்களின் தாய்' என வர்ணிக்கப்படும் நாடாளுமன்றம் எங்குள்ளது?

**ஐக்கிய இராச்சியத்தில் உள்ளது**



அடிப்படை உரிமை மீறல் சம்பந்தமான வழக்குகளை எந்த நீதிமன்றத்தில் தொடர வேண்டும்?

**உயர் நீதிமன்றத்தில்**



லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், சுமத்திரா பீரிஸ் ஆகியோர் எத்துறையில் புகழ் பெற்றவர்கள்?

**சிங்கள சினிமாத்துறையில்**



சந்திரனின் மறுபக்கத்தை முதன்முதலில் படம் படித்த செயற்கைக் கோள் எது? அது எந்த நாட்டைச் சேர்ந்தது?

**லூனா 3, ரஷ்யா நாட்டைச் சேர்ந்தது**



இலங்கையில் வெற்றிகரமாக இதயமாற்று சத்திர சிகிச்சை எந்த வைத்தியசாலையில் செய்து கௌ்ளப்பட்டது?

**கண்டி வைத்தியசாலையில்**

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

# மாதம் ஒரு சைக்கிள்
## வெற்றியாளர்கள் விபரங்கள்

'விஜய்' பத்திரிகையின் 14 ஆவது வருடத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட மாதம் ஒரு சைக்கிள் போட்டியின் வெற்றியாளர் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. வெற்றியாளர்களுக்கு பரிசில்களை வழங்குவது தொடர்பாக தொடர்புகொள்வோம் என்பதை கவனத்தில் கொள்ளவும். அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

(ஆ-ர்)

**ஜனவரி**
செல்வநாயகம் சுஜீதரன்,
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

**பெப்ரவரி**
ப.மிகுசனத்தன்,
இல-91,
வாவிக்கரை வீதி-02,
மட்டக்களப்பு.

**மார்ச்**
ஐ.ஜி.மகேஷ்குமார்,
டிக்கோயா வீதி,
டிக்கோயா.

**ஏப்ரல்**
க.ரக்சவி,
இல89/3E,
சென் மோரிஸ் வீதி,
கொழும்பு-15.

**மே**
எம்.ஐ.எம்.ஜமீல்,
இல-219,
தெஹிகஹதலாவ,
பலாங்கொடை.

**ஜூன்**
ஏ.அன்ஷப்,
ஹூதா நகர்,
கற்பிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் அளவில் பலசாலி

உலகிலுள்ள உயிரினங்களின் உடல் அளவை வைத்துப் பார்த்தால், எறும்புகளைத்தான் மிகவும் பலசாலிகளாக கருத வேண்டியிருக்கும். ஏனெனில், எறும்புகள் தமது உடல் எடையைப் போன்று 50 மடங்கு எடையை சுமந்து செல்லும் ஆற்றலைக் கொண்டுள்ளன.





இந்த ஆற்றலை வேறெந்தவோர் உயிரினமும் கொண்டிருப்ப தில்லை என்பதே உண்மை யாகும்.

## அதிவேக புல்லட் ரயில்

உலகின் அதிவேக புல்லட் ரயில் அண்மையில் சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. சீனாவின் பீஜிங் நகரிலிருந்து ஷங்காய் நகர் வரை பயணத்தை மேற்கொள்ளும் இந்த புல்லட் ரயில், அவ்விரு நகரங்களுக்கும் இடையிலான 1,250 கி.மீற்றர் தூரத்தை 4 மணித்தியாலங்களில் சென்றடைகின்றது. இதற்கு 'Fuxing bullet train' எனப் பெயரிட்டுள்ளனர். இந்த புல்லட் ரயில் பயணிக்கும்போது இடையில் ஆபத்துக்கள் ஏதும் ஏற்பட்டால், தானாகவே வேகத்தைக் குறைத்து நிறுத்திக்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது இதன் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.





## வண்ண பலூன்கள்

மைக்கல் ஃபரடே எனும் விஞ்ஞானி, 1824 ஆம் ஆண்டு பல்வேறு வாயுக்களைப் பயன்படுத்தி பரிசோதனைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதுதான் அவரால் ரப்பர் பலூன் கண்டறியப்பட்டுள்ளது. இன்றைய காலத்தில் ரப்பர், லேடெக்ஸ், பொலிக்ளோரோப்ரீன், நைலோன் துணி போன்ற பொருட்களில் இருந்து பலூன்கள் தயாரிக்கப்படுகின்றன. காற்று, நீர், ஹீலியம், ஐதரசன், நைட்ரஸ் ஒக்சைட், ஒட்சிசன் போன்றவற்றில் ஏதேனுமொன்று பலூன்களில் நிரப்பப்படுகின்றது. இவற்றில், ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பலூன்கள் மிதக்கும் தன்மை கொண்டவை.



## பொரித்த எண்ணெய்யை மீண்டும் பயன்படுத்தலாமா?

சமையலின்போது உணவுப் பொருட்கள் பொரிக்கப்பட்ட எண்ணெய்யை மீண்டும் பலமுறை பயன்படுத்துவதானது. உடலிலுள்ள ஆரோக்கியமான கலங்களைப் பாதித்து நோய்களை ஏற்படுத்தும் என மருத்துவர்கள் கூறுகின்றனர். இதன் மூலம் நமது சிறுகுடலுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. இவை தவிர இருதய நோய்கள், கொலஸ்டரோல் அதிகரிப்பு, அமிலத்தன்மை அதிகரிப்பு போன்ற பல்வேறு உடற்கோளாறுகளும் ஏற்படும் எனவும்



மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். எனவே, ஒரு முறை உணவுகள் பொரிக்கப்பட்ட எண்ணெய்யை மறுபடியும் பயன்படுத்துவதை தவிர்ப்பதே நலமானது. தெருவோர உணவுக்கடைகள், மற்றும் உணவு விடுதிகளில் இந்த பயன்பாடு அதிகம் காணப்படுவதால், அவ்வாறான இடங்களில் விற்கப்படும் உணவுகளை உண்பது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

## 'மறுசுழற்சி' செய்வோம்

பயன்படுத்தி முடித்த பொருட்களை மீண்டும் பயன்படுத்தக் கூடியவாறு மீள் உருவாக்குவதே 'மறுசுழற்சி' எனப்படுகின்றது. இதனால், சூழலில் கழிவுகள் சேரும் அளவு குறைக்கப் படுவதோடு, சூழல் மாசடைவும் தவிர்க்கப்படுகின்றது. பொருட்களை மறுசுழற்சிக்கு உட்படுத்துவதனூடாக, புதிய பொருட்களை உற்பத்தி செய்யத் தேவையான மூலவளங்களின் அளவும் பேணப்படுகின்றது.



மேலும், மறுசுழற்சி செய்யப்பட்டு உருவாக்கப் படுகின்ற பொருட்களின் விலையும் ஒப்பீட்டளவில் குறைவாகவே இருக்கின்றது.

மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களாக உயிரிக் கழிவுகள் (உதாரணமாக: உணவுக்கழிவுகள், தாவரங்கள் மற்றும் தாவரம் சார்ந்த பொருட்கள்), காகிதப் பொருட்கள், கண்ணாடிப் போத்தல்கள், உலோக தகரங்கள், பேணிகள், அலுமினியப் பொருட்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2017, ஒக்டோபர் 04 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 04, 2017.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org